கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை

# செவ்வேள் அருளும் திருப்பரங்குன்றம்

பண்டைத் தமிழகத்தின் சிறப்பு வாய்ந்த வழிபாடாக முருக வழிபாடு இருந்திருக்கிறது. அந்நிலை இன்றுவரை தொடர்கின்றது. இவ் வழிபாடு தமிழ் மக்களுடைய வழிபாடாகவும், பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி நில மக்களுக்குரிய சிறப்பு வழிபாடாகவும் விளங்கிவந்துள்ளது. சங்க இலக்கியங்களும் இவற்றிற்குப் பின்னர் எழுந்த நூல்களும் இதற்குத் தக்க சான்று பகரக் காணலாம்.

இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவன். அவன் இல்லாத இடமேயில்லை. ஆயினும் அவனை வழிபடுவதற்கென ஆங்காங்கே கோயில்களை அமைத்துக் கொண்ட பெருமை சமயிகட்குண்டு. அந்தவகையில் முருக வழிபாட்டினரும் குமரப் பெருமானுக்கென கோயில்கள் பலவமைத்துக் கும்பிட்டுவரலாயினர்.

குமரக் கடவுளுக்கு ஆறுபடை வீடுகள் உண்டென்றும் அவையாவும் மலைகளிலேயே அமைந்துள்ளன என்றும் அறிவோம். "ஆறுபடை வீடு" என்ற சொற்றொடரை வெளிப்படையாக முதன் முதலிற் கூறியவர் நக்கீரராவர். இவர், தாம் இயற்றிய திருமுருகாற்றுப் படையில் "திருப்பரங்குன்றம்" "திருச்செந்தூர்" "பழனி" "திருவேரகம்" "குன்றுதோறாடல்" ஆகிய ஆறு இடங்களையும் முருகனுறையும் ஆறுபடை வீடுகளென்பர். இவற்றுள் "குன்றுதோறாடல்" தனியொரு குன்றினைக் குறிக்கவில்லை. 'ஒவ்வொரு குன்றிலுமிருந்து அருள் புரிகின்றான் குமரன்' என்பதை இது விளக்கி நிற்கிறது.

இக் கட்டுரையில் முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய 'திருப்பரங்குன்றம்' பற்றியும் அவன் பெருமை குறித்தும் ஆராயப்படுகின்றன.

ஆறுமுகப் பெருமானை வழிபடுவோர் அவன் தொடர்பான எல்லாவற்றையும் அறுவகைப்படுத்திப் போற்றிவருதல் வழக்கம்.

சிவனுக்குரிய ஐந்து திருமுகங்களோடு சக்திக்குரிய அதோமுகமும் இணைந்த ஆறு திருமுகங்களிலிருந்து ஆறுமுகங்களுடன் தோன்றியவன் ஆறுமுகக் கடவுள்.

முருகனைப் பாலூட்டி வளர்ந்த கார்த்திகைப் பெண்களும் அறுவர்; இப்பெருமானை வாழ்த்தி வணங்கும் திருமந்திரமும் "சரவணபவ" எனவும் "குமராய நம" எனவும் ஆறு எழுத்துக்களைக் கொண்டதாகும். இதனை நக்கீரரும் "ஆறெழுத்தடக்கிய அருமறை" என்பர். அருணகிரிநாதரும் "இசை பயில் சடாட்சரம்" எனப்புகழ்ந்தேத்துவர். முருகப் பெருமானுடைய 'தாந்திரீக வழிபாட்டு யந்திரமும்' ஆறு கோணங்களையுடைய சக்கரமாகும்.

முருகனுக்குரியவை மூவிருகுணங்களாகும். முற்றறிவு, வரம்பில் இன்பம், இயல்பாகவே பாசங்கள் இல்லாமை, முடிவில் ஆற்றல், பேரருள், தம்வயமுடைமை என்பனவே அவைகளாகும்.

கந்தனுக்குரிய முக்கிய விரதமான கந்தசஷ்டியும் ஆறு தினங்களே கொண்

டாடப்படுகிறது. அந்தவகையில் முருகனுடைய படைவீடுகளும் ஆறு எனக் கொள்ளப்படுவதில் வியப்பில்லை.

ஆறுபடைவீடுகளுள் ஒன்றாக விளங்குவது திருப்பரங்குன்றம். அதுமட்டுமன்றி ஆறுபடை வீடுகளுள் முதலில் வைத்தெண்ணப்படும் சிறப்பும் இதற்குண்டு.

பத்துப் பாட்டு நூல்களுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படையில் திருப்பரங்குன்றத்திலும் முருகன் உறைகின்றான் என்பதனை,

'' மாடமலி மறுகில் கூடற்குடவயின்
...................................................
அஞ்சிறை வண்டின் அரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன்''

என நக்கீரர் நயம்பெறவுரைப்பர். அதாவது, மாடங்கள் மிக்க தெருக்களையுமுடைய மதுரைக்கு மேற்குத்திக்கில், செவ்விய சிறகினையுடைய வண்டுகளின் அழகிய கூட்டம் ஆரவாரிப்பதற்கிடமான திருப்பரங்குன்றிலே முருகன் உறைதலு முரியன்.

திருமுருகாற்றுப்படைக்கு முன்னர் எழுந்த நூலாகிய அகநானூற்றில்

'' சூர் மருங்கு அறுத்த சுடர் இலை
நெடுவேல். சினம்மிகு முருகன் தண்பரங்குன்றம்... ''

என இப்படைவீடு சுட்டப்படுகிறது.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலில் திருப்பரங்குன்றம் திருமாலிருங்குன்றம் எனும் இருவகைக் குன்றங்களைக் குறித்த விரிவான செய்திகள் காணப்படுகின்றன. இவற்றுள், திருப்பரங்குன்றம் செவ்வேள் எனும் சிவமைந்தன் வீற்றிருந்தருள் புரியும் திருத்தலம் எனவும், இக்குன்றத்தில் உள்ள கடப்ப மரத்தடியின் நீழலில் செவ்வேள் உறைந்தருள் புரிகின்றான் எனவும் கூறும் பாடல்கள் உள்ளன. ஆறுபடை வீடுகளையும் அவற்றிலுறையும் முருகப்பெருமானையும் அழகிய சந்தக்கவிதைகளிற் பாடியருளியவர் அருணகிரிநாதர். அவர் திருப்பரங்கிரி முருகனை பின்வருமாறு போற்றுவர்.

'' திடர்த் தெதிர்ந்திடும் அசுரர்கள் பொடிபட
அயிற்கொடும்படை விடுசரவணபவ
திறற் குகன் குருபரனென வருமொரு முருகோனே
செழித்த தண்டலை தொறு மிலகியகுட
வளைக் குலந்தரு தரளமு மிகுமுயர்
திரும்பரங்கிரி வளநகர் மருவிய பெருமாளே ''

'' மருவுங் கடல் துந்துமியும் குட
முழவங்கள் குமின் குமின் என்றிட
வயமொன்றிய செந்திலில் வந்தருள் முருகோனே
மதியுங் கதிருங் புயலுந்தினம்
மறுகும்படி அண்டமிலங்கிட
வளர்கின்ற பரங்கிரி வந்தருள் பெருமாளே.

திருப்பரங்குன்றம் ஆகிய நகரத்தின் நடுநாயகமாகத் திகழும் மலை 300 அடி உயரத்தையுடையது. இம் மலையின் தோற்றம் சிவலிங்கவடிவில் அமைந்துள்ளது. சிவபெருமானே குன்றுருவாக அமைந்துள்ளார் என்பது சைவ சமயிகள் நம்பிக்கை யாகும். அதனால் இக்குன்றை சிவபெருமானாகவே யெண்ணித் தொழுது வந்தால் தொல்வினையாவும் தொலைந்து விடும் என்கிறார் ஆளுடைய பிள்ளையார்.

'' மைத்தகு மேனி வாளரக்கன்தன் மகுடங்கள்
பத்தின திண்டோள் இருபதும் செற்றான் பரங்குன்றைச்

"சித்தமதொன்றிச் செய்கழல் உன்னிச் சிவன் என்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம் மேல் நில்லாவே"

மேலும்,

"பரங்குன்றை யுன்னிய சிந்தையுடைய வர்க்கில்லை யுறுநோயே..."

எனவும் அருளியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பரங்கிரி நாதரைப் (சிவனை)போற்றித் தாம் பாடிய பாடல்கள் பத்தையும் படிப்பவர்,

"பரங்குன்றம் மேய பரமன் அடிக்கே
குடியாகி வானோர்க்கும் ஓர் கோவும் ஆகி
குலவேந்தராய் விண்முழுதாள்பவரே"

என அறுதியிட்டுக் கூறுவர்.

சிவன் வேறு முருகன் வேறு அல்லர் எனும் கருத்துடையவர்கள் சைவசமயிகள். சிவனுடைய சக்தியே கந்தன் என்பதை கந்தபுராணமும் வலியுறுத்தக் காணலாம்.

"ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகமன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவிபோல்வான் யாவையுமுணர்ந்தான் சீரும்
பாதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்"

ஒருசமயம், திருக்கைலாயத்தில் சிவபெருமான் உமாதேவியாருக்குப் பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசிக்கையில், தேவியின் மடியிலிருந்த குழந்தை முருகனும் அம்மந்திரப் பொருளைக் கற்றுக் கொண்டார். குருமுகமாக வன்றி மறைமுகமாக இப்பொருளைக் கற்பது தவறெனச் சாத்திரங்கள் பகரும்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே"

எனத் திருமந்திரமும் சிவகுருநாதனால் தான் தெளிவு உண்டாகும் என வலியுறுத்துகிறது.

முருகப்பெருமான் பிரணவமந்திர சொரூபமானவர். அவர்வேறு சிவன்வேறு அல்லர். இருவரும் ஒருவரே என்பது முன்னரே கூறப்பட்டது. அவர் வேறு என்றபோதும் உலகத்தார்க்கு உலக நியதியை உணர்த்தவேண்டி முருகன், தான் செய்தது குற்றம் என்பதை ஏற்று அதற்குப் பிராயச்சித்தமாக திருப்பரங்குன்றத்தில் சிவனை எண்ணித் தவஞ்செய்யலானார். இத்தவத்தினால் மனம் மகிழ்ந்த சிவன் உமாதேவியாருடன் முருகனுக்குக் காட்சியளித்துப் பரங்கிரிநாதர் எனும் பெயரைப் பெறலானார்.

திருப்பரங்குன்றத்தில் பரங்கிரிநாதருடைய ஆலயம் உள்ளது. பரங்கிரிநாதர் ஆவுடைநாயகியுடன் வீற்றிருந்தருளும் இவ்வாலயம் இப்பொழுது 'மீனாட்சி சுந்தரேஸ்வரர்' கோயில் என விளங்குகிறது. திருப்பரங்கிரியில் முருகனை வழிபடச்செல்பவர்கள் முதலிற் பரங்கிரிநாதரையும் ஆவுடை நாயகியையும் வணங்கிய பின்னரே குமரனை வழிபட வேண்டுமென்பது மரபாகும்.

நக்கீரர் "திருமுருகாற்றுப்படை" பாடுவதற்குக் காரணமாக அமைந்த அதிசய

சம்பவமொன்றும் திருப்பரங்கிரியில் இடம் பெற்றது.

நக்கீரர் மதுரையில் சோமசுந்தரக் கடவுளுடன் வாதம் புரிந்த பாவம் தொலைவதற்காக தீர்த்த யாத்திரை செய்யப்புறப்பட்டார். அவர் திருப்பரங்குன்றையடைந்து அங்கேயொரு குளத்தின் கரையில் உள்ள அரசமரத்தினருகில் அமர்ந்து சிவபூசை செய்யலானார். அப்பொழுது அந்த அரசமரத்தின் இலையொன்று நீரிற்பாதியும் குளத்தின் கரையிற்பாதியுமாக விழுந்தது. நீரில் விழுந்த பாதி மீனாகவும், நிலத்தில் விழுந்த பாதி பறவையாகவும் மாறி ஒன்றையொன்று இழுக்கத்தொடங்கின. இவ்வதிசயத்தைக் கண்ட நக்கீரர் சிவபூசையிற் கவனம் செலுத்தத்தவறவே, கற்முகியெனும் பூதம் இவரைப் பிடித்துக் கற்குகையொன்றில் சிறைவைத்தது. அச்சிறையில் இவருக்கு முன்னரே தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பதுபேர் சிறையிலடைக்கப்பட்டிருந்தனர். ஆயிரம்பேர் சேர்ந்ததும் அவர்களை ஒன்றாக விழுங்கக் கருதியிருந்தது கற்முகியெனும் பூதம். அதனால் நக்கீரரின் வருகை அச்சிறையிலிருந்தோர்க்கெலாம் மிகுந்த கவலையையுண்டுபண்ணியது. இதனையுணர்ந்த நக்கீரர் முருகப்பெருமானைத் துதித்து திருமுருகாற்றுப்படையைப் பாடியருள, குமரக்கடவுளும் மகிழ்ந்து தனது கைவேலால் குகையைப் பிளந்து பூதத்தையும் கொன்று எல்லோரையும் சிறை விடுத்தருளினார்.

முருகனது இவ்வருட்செயலால் உளம் நெகிழ்ந்த நக்கீரர் அவனுடைய வேலின் சிறப்பைப்பற்றி,

'' வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கை வேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

எனப் போற்றிப் புகழ்ந்தார். மேலும்,

'' குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரர் இடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன் கைவேல் ''

என குமரப் பெருமான் தன்னைக் காத்த வரலாற்றையும் கூறி இறும்பூதெய்துகின்றார்.

இவ்வெண்பாக்கள் நக்கீரராற் பாடப்படவில்லையென்றும் பின்வந்தோரால் பாடப்பட்டுத் திருமுருகாற்றுப்படையுடன் இணைக்கப்பட்டுள்ளன வென்றும் தெரிகிறது. எனினும் இவ்வரலாற்றிலிருந்து தெரியவருவதென்னவென்றால், ஒருவன் உண்மையுணராது பிறருடன் வாதிடுதல் தவறு. அதுவும் கடவுள் செயலை எதிர்த்து வாதிடுதல் தவறுமட்டுமல்ல, பாவமுமாகும். சிவபூசை செய்யுமொருவன் (கடவுளை வழிபடும்போது) ஐம்புலன்களையுமடக்கி, சிந்தனையைச் சிவன்பால் நிறுத்தி வழிபாடியற்ற வேண்டும். தவறினால் பாவம் செய்தவனாவான். அப்பாவத்திற்குரிய தண்டனையை அனுபவித்தேயாக வேண்டும். எனினும் செய்த பாவத்தை உணர்ந்து இறைவனை வழிபட்டால் நிச்சயமாக கடவுள் அப்பக்தனைக் காப்பாற்றத் தவறமாட்டார்.

முருகன் மீது எழுந்த பிள்ளைத்தமிழ் நூல்களுள் ஒப்புயர்வற்றது பகழிக் கூத்தர் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழாகும். இந் நூலிலும் மேற்படி வரலாறு மிகவும் அழகிய சொல்லோ

வியமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அப் பாடலின் அருமைகருதி இவ்விடத்தில் குறிப்பிடாதிருக்கமுடியவில்லை.

ஏர்கொண்ட பொய்கைதனில் நிற்கு
மொரு பேரரசின்
இலைகீழ் விழில் பறவையாம்
இது நிற்க நீர்விழில் கயலாம்; இதன்
றியோர்
இலையங்கு மிங்கு மாகப்
பார்கொண்ட பாதியும் பறவைதானாக
அப்
பாதியும் சேலதாகப்
பார்கொண்டிழுக்க; அது நீர் கொண்டி
ழுக்கவிப்
படிகண்டதிசய மென
நீர்கொண்ட வாவிதனில் நிற்மொரு
பேழ்வாய்
நெடும்பூதம் அதுகொண்டு போய்
நீள்வரை எடுத்ததன் கீழ்வைக்கும்; அது
கண்டு
நீதி நூல் மங்காமலே
சீர்கொண்ட நக்கீரனைச் சிறை விடுத்
தவா
செங்கீரை யாடி யருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி
வேலனே
செங்கீரை யாடி யருளே.

திருப்பரங்குன்றத்துக்கு இன்னுமொரு சிறப்புண்டு. தேவசேனாதிபதியாகிய செவ் வேளுக்கும் தெய்வயானைக்கும், நடை பெற்ற திருமணம் பரங்குன்றிலேயே இடம் பெற்றது. சூரபத்மன், சிங்கமுகன், தாரகா சுரன் ஆகிய அசுரர்களைக் கிளையோடு கொன்று தேவர்கள் துயர்களைந்த முரு கப்பெருமானுக்கு நன்றி செலுத்து முக மாக தெய்வேந்திரன் தன்னுடைய புதல்வி யாகிய தேவயானையை குமரப்பெருமா னுக்குத் திருமணம் செய்து கொடுத்த வர லாற்றைத் திருப்பரங்கிரிப் புராணம் பின் வருமாறு எடுத்துரைக்கும்.

சுருதிமழை பிலிற்றியிடுஞ் சதுர்முகனார்
சடங்கியற்றத் தோகை பாகன்
கருதிவிழி விருந்தருந்தக் கண்ணிறைந்த
மேனியான் கைந்நீர் வார்ப்பத்
தருதியெனக் கையேந்திப் பரிதிமதி
விளக்கேந்தத் தந்தி மாதை
வருதியெனக் கைப்பிடித்துப் பரங்கிரியின்
மணந்தவனை வணக்கம் செய்வாம்,

சிவன்செய்த நன்றியை மறந்து, தேவர் கள் தக்கன் இயற்றிய வேள்விக்குச் சென்று பாவத்தைத் தேடிக்கொண்டனர். அத னால் ஆயிரக்கணக்கான வருடங்கள் அசு ரர்கையில் அகப்பட்டுச் சொல்லொணாத் துயரமுற்றனர். இதிலிருந்து பெற்ற அநுப வம் காரணமாவே தேவர்கள் நன்றியுடை யவர்களாக, முருகனுக்கு திருமணத்தைச் செய்துவைத்தனர் என்பாருமுளர்,

புராணக்கதைகள் அனைத்தும் மக் களுக்கு நன்னெறி புகட்ட எழுந்தன வாகையால், அவை கூறும் தத்துவப் பொருளை உணர்ந்து படித்தல் வேண்டுமே யன்றி உண்மை பொய்யை ஆராயப்புகுத லாகாது என்பர் அறிஞர். திருபரங்கிரி யுடன் தொடர்புடைய கதைகள் ஏராள மாக உண்டு. அவையனைத்தும் கூறும் உண்மைப்பொருள் இவைதான்.

கடவுள் ஒருவர்; அவன் எங்குமுளன்; அவன் பெருங்கருணையாளன்; அவனை நம்பித் தொழுபவர்கள் விரும்பிய பேறுகள் அனைத்தையும் பெற்று மகிழ்வர்.

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம்
தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்
—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந்
தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்,

ஓம் சரவணபவ.